[21st January 1961

Memorial to V.O. Chidambaram

MR. SPEAKER : As the hon. Member who gave notice of Question No. 67 is not in his seat, the question and answer will be printed in the proceedings[a].

Anicut across Sendurai odai

* 68 *Q.*—SRI S. RAMALINGA PADAYACHI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலுகா குருமூர் கிராம ஏரிக்குத் தண்ணீர் கொடுக்க செந்துறை ஓடையில் மொட்டணை கட்டும் உத்தேசம் உண்டா?

(இ) அப்படியானல், எவ்வளவு செலவில்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. The anicut will be across Kulumur Odai, below the confluence of Sendurai and Nakkambadi Odais.

(*b*) Rs. 79,000.

SRI S. LAZAR : May I know, Sir, whether is has been included in the Third Five-Year Plan ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of being included in the Third Plan. If the scrutiny is finalised, it will be taken up presently.

Memorial to V. O. Chidambaram—Q. No. 67 continued

SRI K. VINAYAKAM : Sir, I would request the Chair to go back to Question No. 67 as it is of paramount importance to the House.

MR. SPEAKER : The hon. Member is not alert. If, however, the House desires to allow the question to be put and answered, I have no objection.

SRI N. R. THIAGARAJAN : ஸார், 67-வது கேள்வி சிதம்பரனர் சம்பந்தமானது.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் முன்னெச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும்.

SRI N. R. THIAGARAJAN : ஸார், தயவு செய்து இச் கேள்வியை எடுத்துக் கொள்ளுங்கள்.

MR. SPEAKER : சரி, யார் இந்தக் கேள்வியைக் கேட்கப் போகிறுர்கள்?

* 67 *Q.*—SRI N. R. THIAGARAJAN (on behalf of Sri K. R. NALLASIVAM) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோவை மத்திய சிறையில் செக்கிழுத்த சிதம்பரனுருக்கு ஞாபகச் சின்னம் எழுப்பும் உத்தேசம் உண்டா?

[a] Answered subsequently.

21st January 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM: வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களுக்குக் கோவை சிறையில் நினைவுச் சின்னம் நிறுவும் யோசனை இல்லை. அவர்கள் பிறப்பிடமாகிய ஓட்டப்பிடாரத்தில் நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

S.S.L.C. Examination

* 69 *Q.*—SRI T. S. RAMASWAMY: Will the Hon. the Minister for Finance be pleased to state the nature of encouragement given by the Government to the High Schools which produced cent per cent results in the S.S.L.C. Examination for the past two years?

THE HON. SRI C. SUBRAMANIAN: None of the High schools in this State produced cent per cent results in the S.S.L.C. Public Examinations held during the last two years. The schools that produced 75 per cent and more of passes were commended.

SRI A. VEDARATHNAM: நூற்றுக்கு நூறு மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. பரிட்சையில் தேறிய பள்ளிகளுக்கு அரசாங்கம் என்ன ஊக்கம் கொடுக்க முன்வரும்? இதுவரை என்ன செய்திருக்கிறார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM: பாராட்டுதல் தெரிவிக்கப் படுகின்றன.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், எஸ்.எஸ்.எல்.ஸி. பரிட்சையில் நூற்றுக்கு நூறு மாணவர்கள் தேறும் அல்லது அதைவிட 5, 10, 20 சதவிகிதம் குறைந்து தேறும் உயர்நிலைப் பள்ளிகளை மட்டும் தூண்டுவிக்கப்படுகிறதா? அல்லது ரொம்ப குறைந்த பாஸ் செய்யும் உயர்நிலைப் பள்ளிகளையும் தூண்டுவிக்கப் படுகிறதா? என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இரண்டையும் தூண்டு விக்கப்படுவது உண்டு. ரொம்ப குறைவாக தேறும் பள்ளிகளை இன்னும் நன்றாக போதிக்க வேண்டுமென்று தூண்டுவிக்கப்படு கிறது. அதே மாதிரி நிறைய மாணவர்கள் தேறும் பள்ளிகளுக்கு பாராட்டுதல் தெரிவிக்கப்படுகின்றது.

SRI A. A. RASHEED: Is it a fact that there was a large percentage of failures in the recent S.S.L.C. Examination and if so, may I know the reasons for failures?

(No answer)

SRI A. VEDARATHNAM: நன்றாக நடத்தப்படுகின்ற பள்ளி களுக்குப் பரிசுத் திட்டம் வைத்திருக்கிறார்கள். அதேபோல் நூற்றுக்கு நூறு மாணவர்கள் தேறுகின்ற பள்ளிகளுக்கு இந்தப் பரிசுகள் வழங்கப்படுமா?